வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 13.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வளர்ச்சி அடைந்த பாரதத்தின் அர்ப்பணிப்பை நமது தேசியக் கொடி பறைசாற்றுவதாக குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் தெரிவித்தார்.

உலகின் ஜனநாயக நடைமுறைகளுக்கு இந்தியா எப்போதும் முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

புதுச்சேரி சட்டப் பேரவை பிரஞ்ச் நாடுகளின் நாடாளுமன்ற கூட்டமைப்பில் சேர்ந்துள்ளதாக சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மின் பற்றாக்குறை இல்லை என்று மின்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுவையில்,அடுத்த 2 தினங்களுக்கு மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஜெகதீப் தன்கர்

குடியரசு துணைத் தலைவர் திரு ஜகதீப் தன்கர் இல்லம் தோறும் மூவர்ணக் கொடி இருசக்கர வாகனப் பேரணியை புதுடெல்லியில் இன்று காலை கொடி அசைத்து துவக்கி வைத்தார். மத்திய அமைச்சர்கள் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், திரு ராம் மோகன் நாயுடு, திரு கிரண் ரிஜிஜு, திரு மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பாரத் மண்டபத்தில் தொடங்கிய இந்தப் பேரணி மேஜர் தியான்சந்த் தேசிய விளையாட்டு அரங்கில் நிறைவு பெற்றது.

இந்த நிகழ்ச்சியின் துவக்க விழாவில் பேசிய திரு ஜகதீப் தன்கர் மூவர்ணக் கொடி தேசத்தின் சுதந்திரம், பெருமை மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதத்தின் அர்ப்பணிப்பை பறைசாற்றுவதாக தெரிவித்தார்.மேலும் இது ஒரு இயக்கமாக மாறி கோடிக்கணக்கான மக்கள் தங்களின் வீடுகளில் மூவர்ணக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டார்.

கலாச்சார அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் பேசுகையில், மூவர்ணக் கொடி, தேசத்தின் பெருமை என்றும் நாட்டை ஒருங்கிணைப்பதாகவும் தெரிவித்தார்.

ஜெய்சங்கர்

உலகின் ஜனநாயக நடைமுறைகளுக்கு இந்தியா எப்போதும் முழு ஆதவு அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இந்திய-அமெரிக்க உறவுகளின் பரிணாமம் மற்றும் அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சா வளியினர் குறித்து நிகழ்ச்சி ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அமெரிக்காவின் அதிபராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அந்நாட்டுடன் இணக்கமாக இந்தியா செயல்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இருதரப்பு உறவுகளில் இந்திய வம்சா வழியினர் நேர்மறை எண்ணங்களுடன் செயல்படுவதாகவும் தெரிவித்த அமைச்சர், அமெரிக்காவில் வாழும் பிறநாட்டு வம்சா வளியினரை விட இந்திய வம்சா வளியினர், தாய் நாட்டுடன் ஆழமான இணைப்பில் உள்ளதாக கூறினார்.

உலகம் இப்பொழுது கடினமான சூழலில் இருப்பதாகவும், மத்திய கிழக்கு, யுக்ரைன், தென்கிழக்கு ஆசியா,உள்ளிட்ட நாடுகளில் நிலவும் சூழல்கள் மற்றும் கோவிட் நிலவரங்களின் தொடர்ச்சியான தாக்கங்கள் சவாலாக உள்ளதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பேரிடர்

பேரிடர் மற்றும் இயற்கை சீற்றங்கள் குறித்த ஒளிப்பட காட்சிகளை வெளியிடும் போது, தேதி மற்றும் நேரத்துடன் வெளியிடுமாறு தொலைக்காட்சி செய்தி நிறுவனங்களை தகவல் - ஒலிபரப்பு அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஒவ்வொரு முறையும் பேரிடர் மற்றும் இயற்கை சீற்றங்கள் குறித்த காட்சிகளை வெளியிடும் போது, சம்பவம் நடந்த நாள் முதல் எடுக்கப்பட்ட காட்சிகளை தொடர்ச்சியாக தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்புவதால், அதனை காணும் பொது மக்கள் குழப்பம் மற்றும் அச்சம் அடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செய்திகளை ஒளிபரப்பும் போது சம்பவம் நடந்த தேதி மற்றும் நேரத்துடன் வெளியிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற செய்திகளை வெளியிடும் போது நிகழ்ச்சி குறியீடுகளின் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு ஒளிபரப்ப வேண்டும் என்றும் அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

த□வரிசை

தேசிய உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் காரைக்கால் தேசிய தொழில் நுட்ப நிறுவனம் 97-ஆவது இடம் பிடித்துள்ளதற்கு அந்நிறுவனத்தின் இயக்குநர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அந்நிறுவனத்தின் பதிவாளர், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் டாக்டர் மகரந் மாதவ் கங்ரேக்கர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், கட்டமைப்பு மேம்பாடு, படைப்பாற்றல், ஆராய்ச்சி வசதிகள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, ஆராய்ச்சி வெளியீடுகள், வேலை வாய்ப்பு மற்றும் உயர்கல்வி உள்ளிட்ட பல்வேறு  நிலைகளில் காரைக்கால் தேசிய தொழில் நுட்ப நிறுவனம் வளர்ச்சி அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வரும் காலங்களில் இந்நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் தரவரிசை முன்னேற்றதிற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிக்கும் முறை, ஆராய்ச்சிகள், தொழில்முறை நடைமுறைகள் உள்ளிட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த தேசிய தரவரிசைப் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுவது குறிப்பிடத் தக்கது.

சட்டப் பே□வை

காமராஜர் கல்வீடு கட்டும் திட்டத்திற்கான நிதி 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு சட்டப் பேரவையில் இவ்வாறு பதில் அளித்துப் பேசிய முதலமைச்சர் திரு ரங்கசாமி, காமராஜர் கல்வீடு கட்டும் திட்டம் மீண்டும் துவக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, புதுச்சேரி சட்டப் பேரவை பிரஞ்ச் நாடுகளின் நாடாளுமன்ற கூட்டமைப்பில் சேர்ந்துள்ளதாக சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம் அறிவித்தார்.

இதனால், பிரஞ்ச் மொழி பேசும் நாடுகளுடன் புதுச்சேரியின் நட்புறவை பேணிகாக்கவும், கல்வி, சுற்றுலா, கலாச்சார பரிவர்த்தனைகளுக்கு ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரஞ்ச் மொழி பேசும் 56 நாடுகளின் நாடாளுமன்றங்கள் இந்த அமைப்பில் உள்ளது.

*லட்சுமி நா□யணன்*

புதுச்சேரியில் விரைவில் திரைப்பட நகரம், தீம் பார்க் அமைக்கப்படும் என்று பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார்.

இன்று சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் போது பிஜேபி உறுப்பினர் திரு ராமலிங்கம் இதுகுறித்து எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்து பேசிய அமைச்சர், மணப்பட்டு கடலோரப் பகுதியில் மிகப் பெரிய படப்பிடிப்பு வளாகம் மற்றும் பொழுது போக்கு பூங்கா மத்திய அரசு பங்களிப்புடன் தொடங்கப்படும் என தெரிவித்தார். திட்டம் குறித்து நிதி ஆயோக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்படும் என்றும் தெரிவித்தார்.

*நமச்சிவாயம்*

புதுச்சேரியில் மின் பற்றாக்குறை இல்லை என்று மின்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.சட்டப் பேரவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்துப் பேசிய திரு நமச்சிவாயம், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மின் தேவை 510 மெகாவாட்டில் இருந்து 540 மெகாவாட்டாக உயர்ந்துள்ளதாகவும், மாநிலத்தின் மின் தேவையை பூர்த்தி செய்ய தேவையான மின்சாரம் மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் இருந்தும், புதுச்சேரி பவர் கார்ப்பரேஷனிடம் இருந்தும் பெறப்படும் மின்சாரம் போதுமானதாக உள்ளதால், மாநிலத்தில் மின் பற்றாக்குறை இல்லை என்று தெரித்துள்ளார்.

லாஸ்பேட்டை மற்றும் தவளக்குப்பத்தில், புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளை பவர் கிரிட் நிறுவனத்தின்

மூலம் மேற்கொள்ள, அரசின் ஒப்புதலுக்கு கோப்புகள் அனுப்பப் பட்டுள்ளதாகவும், ஒப்புதல் பெற்ற பின் பணிகள் 2 ஆண்டுகளில் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார். பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ் வீடுகளின் மேற்கூரையில் சூரிய மின் உற்பத்தி தகடுகள் அமைக்க 1 கிலோ வாட்டுக்கு 30 ஆயிரம் ரூபாயும், 2 கிலோ வாட்டுக்கு 60 ஆயிரம் ரூபாயும், 3 கிலோ வாட்டுக்கு உச்சவரம்பாக 78 ஆயிரம் ரூபாயும் மத்திய அரசின் நிதி உதவியாக வழங்கப்படுவதாக தெரிவித்துள்ள அமைச்சர், 2026-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் 6 ஆயிரம் வீடுகளின் மேற்கூரைகளில் மொத்தம் 20 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி தகடுகள் அமைப்பதற்கான செயல் திட்டம் மத்திய புதுப்பிக்க தக்க எரிசக்தி அமைச்சகத்திடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒத்திகை

புதுச்சேரியில் நடைபெற உள்ள 78-ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அணி வகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. கடற்கரை சாலை காந்தி சிலை முன்பு இன்று காலை நடைபெற்ற இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் பள்ளி-கல்லூரி மாணவர்கள், தேசிய மாணவர் படை, காவல் துறையினர் உள்ளிட்டோர் ஒத்திகையில் ஈடுபட்டனர். தொடர்ந்து பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளின் ஒத்திகையும் இடம் பெற்றது.

*வானிலை*

தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒரு சில இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும், மன்னார் வளைகுடா தென் தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஹாக்கி-அணி*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று, இன்று புதுடெல்லி திரும்பிய இந்திய ஹாக்கி அணியின் ஒரு பிரிவினருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் டெல்லி விமான நிலையத்தில் திரண்டு வீரர்களுக்கு தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா டெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் வீரர்களை கவுரவித்தார். இந்திய ஆடவர் ஹாக்கி அணியின் முதல் குழு சென்ற சனிக்கிழமை புதுடெல்லி விமான நிலையம் வந்தது குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வளர்ச்சி அடைந்த பாரதத்தின் அர்ப்பணிப்பை நமது தேசியக் கொடி பறைசாற்றுவதாக குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் தெரிவித்தார்.

உலகின் ஜனநாயக நடைமுறைகளுக்கு இந்தியா எப்போதும் முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

புதுச்சேரி சட்டப் பேரவை பிரஞ்ச் நாடுகளின் நாடாளுமன்ற கூட்டமைப்பில் சேர்ந்துள்ளதாக சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மின் பற்றாக்குறை இல்லை என்று மின்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுவையில்,அடுத்த 2 தினங்களுக்கு மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------